2. தகவல் கோரல்.

(அ) மதுவிலக்குச் சட்டம் தளர்த்தப் பெறுவது குறித்து.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அமைச்சரிடத்திலே ஒரு விளக்கம்பெற விரும்புகிறேன். அண்மையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மதுவிலக்குச் சட்டம் இலகுவாகின்ற வகையில் உரிமங்கள் அளிப்பது போன்ற பல்வேறு வகைகளிலும், சிறைச்சாலையிலே இருக்கின்ற கைதிகளை விடுவிப்பதற்கு ஆணை பிறப்பிக்கின்ற வகையிலும் புதிய அறிவிப்புக்களைச் செய்தார்கள். அதையொட்டி நேற்றைய தினம் விதிகள் திருத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அந்த விதிகள் திருத்தத்தோடு அந்தத் தீவிரச் சட்டம் நின்றுவிடுகிறதா அல்லது சட்டத் திருத்தங்கள் இங்கே கொண்டுவரப்பட இருக்கிறதா? ஏனென்றால் சட்டத்தினுடைய நோக்கம் வேறு. இப்போது விதிகள் திருத்தப்பட்டு நடைமுறையிலே மதுவிலக்கு தளர்த்தப்பட்டிருக்கிற நிலை வேறு. இரண்டிற்கும் முரண்பாடு இருக்கிற காரணத்தால் சட்டம் அப்படியே நீடிக்கப்படுமேயானால் கடுமையான தண்டனைகளுக்கு நாடு கடத்தல் போன்ற தண்டனைகளுக்கெல்லாம் மக்கள் ஆளாகக்கூடிய சூழ்நிலை நாட்டிலே இருக்கிறது. எனவே சட்டம் திருத்தப்படுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமல்படுத்தப்படுகிற மதுவிலக்குச் சட்டத்தில் சில விதிகளைத் தளர்த்தியிருக்கிறோம் என்று அரசு அறிவித்திருக்கிறது. அப்படித் தளர்த்தி இருக்கிற விதிகளை மாற்றுவதற்கும் உருவாக்குவதற்கும் அரசினுடைய அதிகாரத்திற்குட்பட்டு அந்தச் சட்டத்திற்குட்பட்டு விதிகளை மாற்ற அரசு அறிவித்து இருக்கிறது. தேவையான சட்டத் திருத்தங்களைத் தேவையான நேரத்திலே சட்டமன்றத்தின் முன்னாலே வைத்து அரசு நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பிற்படுத்தப்பட்டோருக்கு அளிக்கப்பெறும் சலுகை குறித்து.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இன்னொரு கருத்துப் பற்றிய விளக்கமும் அறிந்துகொள்ள விரும்புகிறேன். பிற்படுத்தப்பட்டோர் பாதிக்கப்படுகிற அளவிற்கு பிறப்பிக்கப்பட்ட உத்திரவு திரும்பப் பெறப்படுகிறது என்று முதல் அமைச்சர் தெரிவித்த அதே நேரத்திலே 31 சதவீதம் என்பது பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50 சதவீதமாக உயர்த்தப்படும் என்றும் அறிவித்துள்ளார். அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு விட்டனவா ? இல்லையென்றால் எப்போது பிறப்பிக்கப்படும்?

1980 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை அதிகரித்தது பற்றி அரசு ஆணை பிறப்பித்திருக்கிறதா என்ற பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். கொள்கை ரீதியாக அரசு ஏற்றுக்கொண்டு அறிவித்திருக்கிறது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நல்ல முறையிலே தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா என்பதைப்பற்றி இன்னும் பத்து நிமிடங்களிலே தெரிந்து நான் இந்த அவையிலே எடுத்துச் சொல்கிறேன்.

[முற்பகல் 10-20]

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, அதோடு பிற்பட்டவர்களுக்கு வருவாய் லிமிட் ஏற்கனவே இருந்த சட்டத்தில் 9,000 ரூபாய் வருவாய் லிமிட் இருந்தது. அதையும் மாற்றி இப்பொழுது ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த உத்தரவுகூட எல்லா இலாக்காக்களுக்கும் சென்று சேரவில்லை. பத்திரிக்கையில் வந்ததே தவிர அதிகாரப்பூர்வமாக ஜி. ஓ. அல்லது திருத்தச் சட்டத்தின் மூலம் இலாக்காக்களுக்குச் சென்று சேரவில்லை. அதற்கான ஏற்பாடு செய்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அதைத்தான் கேட்டார்.

3. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ.) பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று. அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ், டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம்செய்யப்பெற்றிருக்கிறது.